Newbec

NEW WAY OF BEING CHURCH

21 & 22 அக்டோபர் 2023
ஆண்டின் பொதுக்காலம்
29 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
ஆயர் மன்றம் 2021 – 2023

மாதாந்திர நிகழ்வு:
திருஅவையும் கூட்டு ஒருங்கியப் பயணமும்

# திருஅவை

இரண்டாம் வத்திக்கான் ங்க
திருஅவை கோட்பாட்டு விளக்கம்

21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

இரண்டாம் வத்திக்கான் சங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்: 4 எ 6 எண்கள்

திருஅவையைத் தூய்மையாக்கும் தூய ஆவியார்

4. உலகிலே செய்யுமாறு தந்தை மகனிடம் ஒப்படைத்த வேலையைச் செய்துமுடித்ததும் (யோவா 17:4), திருஅவையை எந்நாளும் தொடர்ந்து தூய்மையாக்கவும், இதனால் நம்பிக்கை கொண்டோர் எல்லோரும் கிறிஸ்துவின் வழியாக ஒரே ஆவி மூலம் தந்தையை அணுகும் பேறுபெறவும் (எபே 2:18) பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவி அனுப்பப்பெற்றார். இவரே வாழ்வின் ஆவியாக, அதாவது பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வை அளிப்பவராகத்திகழ்கின்றார் (யோவா 4:14; 7:38-39) - சாவுக்குரிய மனிதருடைய உடல்களைக் கிறிஸ்துவில் உயிர்பெறச் செய்யும்வரை (உரோ 8:10-11), பாவத்தால் இறந்தோருக்குள் தூய ஆவியே உயிராயிருக்கும்படி தந்தை செய்கிறார்.

தூய ஆவியார் திருஅவையையும் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களையும் கோவிலாகக் கொண்டு குடியிருக்கிறார் (1 கொரி 3:16; 6:19); அவர்களிடமிருந்த வண்ணம் அவர் வேண்டுகிறார்; அவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கின்றார் (கலா 4:6; உரோ 8:15-16, 26); முழு உண்மையை நோக்கித் திருஅவையை வழி நடத்துகிறார் (யோவா 16:13); ஒன்றிப்பாலும் பணியாலும் அதில் ஒற்றுமையை விளைவிக்கிறார்; இன்னும் பலதரப்பட்ட திருஅவை ஆட்சி சார்ந்த கொடைகளையும் அருள்கொடைகளையும் அதற்கு அளித்து அதனை வழிநடத்துகிறார்; தம் கனிகளால் அதற்கு அணிசெய்கிறார் (எபே 4:11-12; 1 கொரி 12:4; கலா 5:22); நற்செய்தியின் வல்லமையால் திருஅவை இளமைப் பொலிவோடு துலங்கச் செய்கிறோர்; என்றும் அதற்கு மறுமலர்ச்சி தருகிறார்; அதன் மணமகனான கிறிஸ்துவுடன் முழுமையாய் ஒன்றிக்கத் திருஅவையை வழிநடத்திச் செல்கிறார்.(3*) ஏனெனில், 1ஆவியாரும் மணமகளும் சேர்ந்து ஆண்டவராகிய இயேசுவை நோக்கி 'வருக! வருக!' என்கின்றனர் (திவெ 22:17). இவ்வாறு அனைத்துலகத்திருஅவை "தந்தை, மகன், தூயஆவி ஆகியோரிடையே உள்ள ஒற்றுமையோடு ஒன்றிணைந்த ஒரு மக்கள் குலம்"(4*) எனத் திகழ்கிறது.

இறை ஆட்சி

5. தூய திருஅவையின் மறைபொருள் அது உருவான விதத்திலிருந்தே தெளிவாகிறது. ஏனெனில், இறையாட்சியின் நற்செய்தியைப் பறைசாற்றி ஆண்டவர் இயேசு தம் திருஅவையைத் தொடங்கிவைத்தார். இறையாட்சியின் இந்த வருகை பல காலங்களாக விவிலியத்திலே உறுதியளிக்கப்பட்டிருந்தது: "காலம் நிறைவேறி விட்டது; இறையாட்சி நெருங்கி விட்டது" (மாற் 1:15; மத் 4:17). இந்த ஆட்சி கிறிஸ்துவின் சொல்லாலும் செயலாலும் உடன் இருப்பாலும் மக்களுக்குத் துலங்குகிறது. ஆண்டவருடைய சொல்வயலில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பிடப்படுகிறது (மாற் 4:14): நம்பிக்கையோடு இதைக் கேட்டு கிறிஸ்துவின் சிறு மந்தையாகிய மக்கள் குழுவோடு சேர்க்கப்படீக்னறவர்களே (லூக் 12:32) இவ்வாட்சியை ஏற்றுக் கொண்டவர்கள். வயலில் விதைக்கப்பட்ட இவ்விதையும் தானாகவே முளைத்து, அறுவடைக்காலம்வரை வளர்கிறது (மாற் 4:26-29). இந்த ஆட்சி உலகில் ஏற்கெனவே வந்துவிட்டது என்பதை இயேசுவின் புதுமைகள் காண்பிக்கின்றன. "நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால், இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது" (லூக் 11:20; மத் 12:28). முதன்முதலில், இறைமகனும் மானிடமகனுமான கிறிஸ்துவிலே இந்த ஆட்சி வெளிப்படுகிறது. இக்கிறிஸ்து "தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற் 10:45)

மனிதருக்காக இயேசு சிலுவையில் துன்புற்று இறந்து, உயிர்த்தெழுந்தபின் ஆண்டவராகவும் மெசியாவாகவும் என்றென்றும் குருவாகவும் நியமிக்கப் பெற்றவராக விளங்குகிறார் (தி.ப. 2:36; எபி 5:6; 7:17-21). தந்தையால் வாக்களிக்கப்பட்ட ஆவியை அவர் தம் சீடர்கள் மேல் பொழிந்தார் (திப 2.33). எனவே, தன்னை நிறுவினவரின் கொடைகளால் நிரப்பப் பெற்றதும், அன்பு, மனத்தாழ்மை மற்றும் தன்னிலை மறுப்பு பற்றி அவர் தந்த கட்டளைகளை வழுவாமல் கடைப்பிடித்து வருவதுமான திருஅவை, கிறிஸ்துவினுடையதும் கடவுளுடையதுமான ஆட்சியை அறிவித்து, எல்லாமக்களிடமும் அதைநிறுவும் பணியை ஏற்றுக்கொண்டது. இந்த ஆட்சியின் முளையாகவும், தொடக்கமாகவும் இவ்வாட்சியின் நிறைவுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது; தன் தலைவரோடு மாட்சியில் ஒன்றுசேர்தலைத் தன் திறனனைத்தையும் கொண்டு பெரிதும் விரும்பி எதிர்பார்க்கிறது.

திருஅவைக்குப் பல்வேறு உருவகங்கள்

6. பழைய ஏற்பாட்டில் ஏற்கெனவே உருவகங்கள் வழியாக இந்த ஆட்சி வெளிப்படுத்தப் பெற்றது. இன்றும் திருஅவையின் உள்ளியல்பு பற்பல உவமைகளால் தெளிவாகிறது. இவ்வுவமைகள் இடையரின் வாழ்விலிருந்தோ, பயிர் செய்வோர் வாழ்விலிருந்தோ எடுக்கப்பட்டவையாய் அமையலாம்; கட்டடக்கலைத் துறையிலிருந்தோ குடும்ப வாழ்விலிருந்தோ, திருமண உறுதி செய்வதிலிருந்தோ பெறப்பெற்றதாய் இருக்கலாம். இவையனைத்தும் இறைவாக்கினரின் நூல்களில் முன்னமே கூறப்பெற்றுள்ளன.

திருஅவை ஓர் ஆட்டுக்கொட்டில். அதில் நுழைவதற்கு இன்றியமையாத ஒரே வாயில் கிறிஸ்து (யோவா 10:1-10). அதுவே மந்தை என அழைக்கப்படும் ஒரு மக்கள் குழு ஆகும். தாமே அதன் ஆயனாக இருக்கப்போவதாகக் கடவுளே முன்னறிவிததுள்ளார் (எசா 40:11; எசே 34:11 தொ.). அதன் ஆடுகளை மனித ஆயர்களே கண்காணித்து வருகின்றனர். எனினும், தம்முயிரைத் தம் ஆடுகளுக்காகக் கொடுத்துவிட்ட (யோவா 10:11; 1 பேது 5:4 கிறிஸ்துவே அவற்றை வழிநடத்தி, அவற்றிற்கு உணவளித்து வருகிறார்.

திருஅவை கடவுள் பண்படுத்தும் தோட்டம், விளைநிலம் (1 கொரி 3:9). இந்த நிலத்தில்தான் குலமுதுவரைத் தன் தூய வேராகக் கொண்ட தொன்மையான ஒலிவ மரம் வளர்கிறது. இதில்தான் யூதருக்கும் பிற இனத்தாருக்கும் இடையே ஒப்புரவு நிகழ்ந்தது. இன்னும் நிகழும் (உரோ 11:13-26). திருஅவை தேர்ந்துக் கொள்ளப்பட்ட திராட்சைச் செடியாக விண்ணக நிலக்கிழாரால் நடப்பட்டிருக்கிறது (மத் 21:33-43; எசா 5:1). உண்மையான திராட்சைச் செடி கிறிஸ்து; கொடிகளாகிய நமக்கு வாழ்வும் வளமையும் வழங்குபவர் அவரே. நாம் திருஅவை வழியாக அவரில் நிலைத்திருக்கிறோம். அவரின்றி நம்மால் எதுவும் செய்ய இயலாது (யோவா 15:1-5).

திருஅவை கடவுளின் கட்டடம் என்றும் பன்முறை கூறப்பட்டிருக்கிறது (1 கொரி 3:9). கட்டுவோரால் புறக்கணிக்கப்பட்டிருப்பினும், மூலைக்கல்லாக அமைந்துவிட்ட ஒரு கல்லுக்கு ஆண்டவர் தம்மை ஒப்பிட்டிருக்கிறர் (மத் 21:42 ஒத்; 1 பேது 2:7; திபா 117:22). இந்த அடித்தளத்தின் மீதுதான் திருத்தூதர்களால் திருஅவை கட்டி எழுப்பப்பட்டுள்ளது (1 கொரி 3:11). இந்த அடிப்படையிலிருந்து தான் திருஅவையும் ஊன்றி நிற்கும் உறுதியையும் நிலைபெறும் தன்மையையும் பெற்றுள்ளது. இக்கட்டடம் கீழ்வரும் பல்வேறு பெயர்களால் அழைக்கப் பெறுகிறது: கடவுளின் வீடு, அதாவது அவர்தம் வீட்டார் வாழும் இடம் (1 திமோ 3:15); தூய ஆவி வழியாகக் கட்டப்பட்டு வரும் கடவுளின் உறைவிடம் (எபே 2:19-22); மனிதர் நடுவே கடவுள் குடியிருக்கும் உறைவிடம் (திவெ 21:3); இன்னும் சிறப்பாகத் திருக்கோவில்; கற்களால் கட்டப்பட்ட கோவில்களும் இத்திருக் கோவிலையையே அடையாள முறையில் காட்டுகின்றன என்று திருஅவை தந்தையர்கள் புகழ்ந்துரைத்துள்ளனர். திருவழிபாடும் இதையே திருநகரத்திற்கும் புதிய எருசேலமிற்கும்5 பொருத்தமாக ஒப்பிடுகிறது. ஏனெனில், இதன் உயிருள்ள கற்களாக இவ்வுலகில் நாம் கட்டி எழுப்பப்படுகின்றோம் (1 பேது 2:5). தன் மணமகனுக்காக அணி செய்யப்பட்ட மணமகளைப்போல (திவெ 21:1-2). உலகம் புதுக்கோலம் பூணும் காலத்திலே, வானகம் விட்டு, கடவுளிடமிருந்து இறங்கிவரும் திருநகரமென்று யோவானும் இதையே கருதுகின்றார்.

மேலும், திருஅவை "விண்ணக எருசலேம்" என்றும் "நமக்கு அன்னை" என்றும் அழைக்கப்பெறுகிறது (கலா 4:26; திவெ 12:17); மாசற்ற ஆட்டுக்குட்டியின் மறவற்ற மணமகளாகவும் உருவகிக்கப் பெறுகிறது (திவெ 19:7; 21:2, 9; 22:17). கிறிஸ்து "திருஅவைக்கு அன்பு செய்து ... அதை ... தூயதாக்குவதற்குத் தம்மையே ஒப்புவித்தார்" (எபே 5:25-26). மீற முடியாத ஓர் உடன்படிக்கையால் அதைத் தம்மோடு இணைத்திருக்கிறார்; இடைவிடாது "திருஅவையைப் பேணி வளர்த்து வருகிறார்" (எபே 5:29); அது தூய்மைப்படுத்தப் பெற்ற பிறகு அதைத் தம்மோடு இணைக்கவும் தம்முடைய அன்பிலும் நம்பிக்கையிலும் அது பணிந்திருக்கவும் விரும்பினார் (எபே 5:24); இறுதியாக, கடவுளும், தாமும் நம்மேல் கொண்ட அறிவுக்கு எட்டாத அன்பை நாம் அறிந்து கொள்ள வேண்டி, திருஅவையைத் தம் விண்ணுலகக் கொடைகளால் என்றென்றைக்கும் நிரப்பியுள்ளார் (எபே 3:19). திருஅவை ஆண்டவரிடமிருந்து அகன்று இம்மண்ணுலகில் பயணம் போகும் வேளையில் (2 கொரி 5:6) வேற்று நாட்டில் தான் வாழ்வதாகவே கருதுகிறது. எனவேதான், கடவுளின் வலப் பக்கத்திலே கிறிஸ்து அமர்ந்திருக்றன்ற மேலுலகு சார்ந்தவற்றை அது நாடவும் அவைபற்றி எண்ணவும் செய்கிறது. அங்கு தன் மணவாளனோடு மாட்சியில் தோன்றும் வரை திருஅவையின் வாழ்வு கிறிஸ்துவோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது (கொலோ 3:1-4).

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
இந்த கோட்பாடு தொடர்பான உங்கள் மதிப்பீடுகளை— மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மைய (API) மின்னஞ்சலுக்கு apidirector@gmail.com அனுப்பவும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 43/2023